2014 ஆகஸ்ட் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மொத்தம் 600 ஏக்கர் நிலங்கள் மற்றும் குளங்கள் பாசனம் பெற வழிவகை செய்ய ஆய்வு செய்யப்பட்டது. இக்கால்வாய் பெண்ணையாற்றின் அருகே வலதுகரை ஓரம் அமைந்துள்ள வன நிலங்கள் வழியாகச் செல்ல வேண்டியிருந்ததால், இத்திட்டத்திற்கு 46.89 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலங்களும், 18.36 ஏக்கர் பட்டா நிலங்களும் கையகப்படுத்த வேண்டியுள்ளது.

பிற்பகல் 12-15

இத்திட்டத்திற்கான பயன் சதவிகிதம் 0.12:1 என்கிற விகிதத்தில் மிகக் குறைவாக இருந்தது. இதனால், இத்திட்டம் பொருளாதார ரீதியாக சாத்தியம் இல்லையென்பதால், அப்பொழுது கைவிடப்பட்டது. தற்போது இத்திட்டத்தைச் செயல்படுத்த சுமார் 50 கோடி ரூபாய் செலவாகும் என்பதாலும், ஆயக்கட்டு 600 ஏக்கர் மட்டுமே பயன் பெறும் என்பதாலும், இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 46.89 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலத்தைக் கையகப்படுத்துவது மிகக் கடினம் என்பதாலும், இத்திட்டம் சாத்தியமற்றதாகவே உள்ளது. இருப்பினும், இத்திட்டத்தினால் பயன் பெறும் பகுதிகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருப்பதால், ஏற்கெனவே உள்ள மதிகெட்டான் கால்வாயின் சுவடுகளைக் கண்டறிந்து, அவற்றைத் தூர் வாரி, தென்பெண்ணையாற்று நீரை ஈச்சம்பட்டி அணைக்கட்டிற்குக் கீழ்புறத்தில் ஒரு அணை கட்டி, வன நிலங்களைத் தவிர்த்து, இப்பகுதிகளுக்கு நீர் வழங்க சாத்தியகூறுகள் இருக்கின்றனவா என அறிய, மறு ஆய்வுப் பணிகள் தொடங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினைப் பெற்று, பணிகள் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) அனுமதியில்லை. (குறுக்கீடு) அது ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) அது ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) தினம், ஒரு கவன ஈர்ப்பு எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) அனுமதியில்லை, தினம் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது*

எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்மொழிப் புலமை பெற்ற ஒப்பற்றத் தலைவியாகவும், உலகத் தமிழர்களின் உண்மைப் பாதுகாவலராகவும், அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடும் இலட்சியமும் கொண்ட சக்தி வாய்ந்த தலைவியாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களின் விடிவெள்ளியாகவும் விளங்குகிற, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கீழ்க்காணும் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 159 முதல் 170 வரையிலான 12 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வமே! தமிழகத்தின் ஒளிவிளக்கே! தரணி போற்றும் மகா சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) துணிவின் சிகரமே! எழுச்சிபெற்ற வீரமே! ஏழையெளியோரின் பொற்காலமே! கோடி தொண்டர்கள் வந்து குவியும் சரணாலயமே! தெய்வத்தின் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை வாழ வைக்கும் குடும்ப குலதெய்வமே! மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 115 முதல் 126 வரையிலான 12 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.